**அசல் வழக்கு எண். 48/2009**

நாள் 16.08.2018

**Name: தர்மலிங்கம் (வா.சா.1 / வாதி)**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என் சகோதரர் சின்னதுரை 2005ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். என்னுடைய மற்ற இரண்டு சகோதரர்கள் அன்பழகன், ராஜேந்திரன் இருவரும் பரணம் கிராமத்தில் உள்ளார்கள். தாவா சொத்து உள்ள கிராமத்தில் எனது சகோதரர் இறந்த சின்னதுரையின் வாரிசுகள் தாவா கிராமத்தில் உள்ளார்கள். தாவா சொத்தில் கீழ்புற கடைசியில் சின்னதுரையின் வாரிசுகள் வீடு கட்டிக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள். தாவா சொத்தின் கீழ்புறம் மொத்தம் 3 வீடுகள் உள்ளது. அதில் ஒன்று கூரை வீடு, இரண்டு ஓட்டுவீடு. நான் செந்துறை தாலுக்காவில் கட்டுப்பட்ட பரணம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை பரணம் முகவரியில்தான் தற்சமயம் உள்ளது. எங்களது குடும்ப சொத்துக்களில் தாவா சொத்து உள்ள கிராமத்தில் உள்ள சொத்துக்களை எனது இறந்துவிட்ட தம்பி சின்னதுரையின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்து உள்ள கிராமத்தில் உள்ள சொத்துக்களின் பட்டா சின்னதுரை பெயரில் இல்லை. பரணம் கிராமத்தில் உள்ள எனது குடும்ப சொத்துகளுக்கு என் இதர சகோதரர்களான ராஜேந்திரன், அன்பழகன் பெயரில் உள்ளது. நாங்கள் மூவரும் பரணம் கிராமத்தில் உள்ள குடும்ப பூர்வீக சொத்துக்களை தலா 1 ஏக்கர் வீதம் என் அப்பா இறந்தபிறகு சுமார் 50 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். அந்த 1 ஏக்கருக்கு அவரவர் பெயரில் இந்த ஆண்டு 2018ல் தனிப்பட்டா ஏற்பட்டு விட்டது. தீர்வையும் அவரவர் 1 ஏக்கருக்கு தனித்தனியாக செலுத்தி வருகிறோம். நானும், எனது மற்ற 3 சகோதரர்களும் பாகம் பிரிந்த சகோதரர்கள் என்றால் சரியல்ல அதனால் குடும்பமேனேஜர் முறையில் இவ்வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் குடும்பமேனேஜர் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2ல் கண்ட சொத்துக்கள் தாவா சொத்தாக கூறும் 5 ஏக்கர் 82 சென்டில் ஒரே இடமாக மேல்புறமாக உள்ளது. வா.சா.ஆ.1 மற்றும் 2ல் கண்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். தாவா சொத்தில் ஆதிதிராவிடர் துறையால் 3 ஏக்கர் நிலஆர் ஜிதம் செய்யப்பட்டது. அந்த நிலஆர்ஜிதம் செய்த சொத்து தாவா சொத்தாக கூறும் 5 ஏக்கர் 82 சென்டில் மேல்புறம். தாவா சொத்தில் மேல்புற 3 ஏக்கரை வருவாய் ஆவணங்களில் நத்தமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலஆர்ஜிதம் 1998ம்

வருடத்தில் ஏற்பட்டது. அதுசமயம் நிலஆர்ஜிதம் செய்வதற்கு முன்பாக தாவா சொத்தில் கட்டுப்பட்ட 5 ஏக்கர் 82 சென்டில் யார் யார் அனுபவம் செய்து வந்தார்களோ அவர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையால் அறிவிப்பு வந்தது. அதுசமயம் அந்த அறிவிப்பு எனது தம்பி சின்னதுரைக்கு மட்டும் வந்தது. அந்த நிலஆர்ஜித வழக்கை நானும், என் தம்பி சின்னதுரையும் நடத்தி வந்தோம். அது சம்மந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவும், அதன்பெயரில் உச்சநீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்வசம் உள்ளது. அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. நான் மேற்படி நிலஆர்ஜித நடவடிக்கை விபரங்களை இந்த வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையத்திற்கு மேல்புற சொத்தை வாய்மொழி கிரையமாக அலமேலு ஆச்சி என்பவரிடம் என் அப்பா வாங்கினார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது).

(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.